CC No. 65/2024 நாள் : 30.05.2024

அ.சா. 6 திரு. செல்வம்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அம்பேத்கார் காலனி, தருமபுரியில் குடியிருந்து வருகிறேன். டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 13.12.2023 ம் தேதியன்று காலை 05.30 – 06.00 மணியளவில் சாலை விநாயகர் கோவில் அருகில் நானும், வரதராஜன் என்பவரும் வந்தபோது போலிசார் ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி மூன்று இடங்களில் திருடியதாக ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்தார். தருமபுரி பாரதிபுரத்தில் 58 3/4 பவுன் நகைகளை திருடியதாகவும், அதியமான்கோட்டையிலும், சேலத்திலும் திருடியதாகவும் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி நகைகளை கிருஷ்ணகிரியில் வைத்திருப்பதாக கூறினார். அதன்பேரில் எங்களையும் எதிரியையும் அழைத்துக் கொண்டு போலிசார் கிருஷ்ணகிரி சென்று கிருஷ்ணகிரி பஸ் ஸ்டாண்டில் நிறுத்தியிருந்த ஒரு காரின் டிக்கியிலிருந்து நகைகளை கைப்பற்றினார்கள். அதற்காக நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே ஏற்கனவே அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எந்தெந்த ஊரில் எவ்வளவு நகைகள் திருடினார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள திருத்தங்களை யார் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னென்ன பொருட்கள் திருடுபோனது என்று தெரியுமா என்றால் தெரியாது. காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் நான் கையெழுத்து மட்டும் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து போலிசார் அடையாளம் காட்டியதால் தான் எனக்கு எதிரியை தெரியும் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

**CC No. 65/2024** நாள் : 30.05.2024

அ.சா. 5 திரு. வரதராஜன்

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். சலூன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 13.12.2023ம் தேதியன்று காலை 04.30 – 05.00 மணியளவில் சாலை விநாயகர் கோவில் அருகில் நானும், செல்வம் என்பவரும் வந்தபோது போலிசார் ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி மூன்று இடங்களில் திருடியதாக ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்தார். தருமபுரி பாரதிபுரத்தில் 58 3/4 பவுன் நகைகளை திருடியதாகவும், அதியமான்கோட்டையிலும், சேலத்திலும் திருடியதாகவும் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி நகைகளை கிருஷ்ணகிரியில் வைத்திருப்பதாக கூறினார். அதன்பேரில் என்னையும், செல்வம் என்பவரையும் எதிரியையும் அழைத்துக் கொண்டு போலிசார் கிருஷ்ணகிரி சென்று கிருஷ்ணகிரி பஸ் ஸ்டாண்டில் நிறுத்தியிருந்த ஒரு காரின் டிக்கியிலிருந்து நகைகளை கைப்பற்றினார்கள். அதற்காக நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. என்னென்ன நகைகளை கைப்பற்றினார்கள் என்று எனக்குத்தெரியுமா என்றால் தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிரி எந்த பொருளையும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நகைகளை யார் எடை பார்த்தார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. போலிசாருடன் நான் எங்கும் செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் தயார் செய்த ஆவணங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

**CC No. 65/2024** நாள் : 30.05.2024

அ.சா. 4 திருமதி. சாய் சரோஜா

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.11.2023ம் தேதியன்று நானும் எனது குடும்பத்தாரும் பெங்களூரில் உள்ள குலதெய்வம் கோவிலுக்கு சென்றுவிட்டோம். மறுநாள் காலை பக்கத்து வீட்டை சேர்ந்த ராமன் என்பவர் எனது கணவர் சிவராமகிருஷ்ணன் என்பவருக்கு போன் செய்து வீட்டின் கதவு திறந்திருப்பதாக கூறினார். நாங்கள் வந்து பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு அதில் இருந்த 58 3/4 பவுன் நகைகள் திருடுபோயிருந்தது. இது சம்மந்தமாக அ.சா.1 தருமபுரி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. புகாரை எனது கணவர் எழுதினார் என்றால் சரிதான். மாங்காய் மாலை 8 பவுன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மாங்காய் மாலை மற்றும் நெக்லஸ் இரண்டும் சேர்ந்து 8 பவுன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. போலிசார் 55 பவுன் நகையை தான் எங்களிடம் ஒப்படைத்தார்கள் என்றாலும், எங்கள் நகை வேறு, நீதிமன்றத்தில் பெற்றுச் சென்ற நகை வேறு என்றாலும் சரியல்ல. எங்கள் வீட்டிலிருந்து பொருட்கள் திருடுபோகவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.